1972 ஆகஸ்ட் 22]

THIRU K. M. SUBRAMANIAM : Sir, the Hon. Minister has stated in reply to my supplementary, that that is the duty of the Corporation. May I point out that 50 per cent of the grant is given by the Government. Now I am not able to get a proper reply and so is it not the duty of the Government to find out why there is a delay of 6 to 7 years in declaring this dhobikhana in Saidapet open after being completed ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவர் அவர்களே, இதிலே மூன்று பேர்கள் பங்கேற்றுக் கொள்கிருர்கள். நகராட்சி இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்குநர், பின்தங்கிய வகுப்பினர் நல இயக்குநர் ஆகியவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது. மாநகராட்சி மன்ற இயக்குநர்தான் பொறுப்பு வகிக்கிருர் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில். அவர்கள் தகவல் தந்த பிறகுதான் நாம் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு க. நாகராசன் : தலைவர் அவர்களே, பாதித் தொகையைக் கொடுக்க முடியாத நகராட்சிகளாக இருந்தால், அரசாங்கமே அவற்றிற்கான முழுத் தொகையையும் கொடுத்துவிட்டு பின்னர் அவற்றிடமிருந்து வாங்கிக் கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து ஒரு நல்ல ஆலோசனை. அப்படி அரசாங்கம் செய்யலாம், ஆனல், இது நிதி சம்பந்தப்பட்ட பிரச்னையாக இருப்பதால், நிதி கிடைப்பதைப் பொறுத்துத்தான் நடைபெற வேண்டுமென்ற எண்ணத்தைத் தெரிவிக்க வேண்டியவனக இருக்கிறேன்.

பாதிரிவேடு கிராமத்தில் மாணவரில்லம்

*262 வின.—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

கும்முடிப்பூண்டியில் துணை வட்டம், பாதிரிவேடு கிராமத்தில் விரைவில் பிற்பட்ட மாணவரில்லம் ஒன்று அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : அரசு ஆணை பலவகை 422, நாள் 6–5–1972–ல் பின்தங்கிய வகுப்பினருக்காக 1972–73–ம் ஆண்டில் திறக்க உத்திரவிடப்பட்டுள்ள 35 உணவு விடுதிகளின் பாதிரிவேடு என்னுமிடத்தில் உணவு விடுதி திறப்பதும் சேர்க்கப்பட்டுள்ளது. அந்த உணவு விடுதி 1–6–1972–ல் திறக்கப்பட்டுள்ளது.

திரு கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சட்டமன்றத்தில் வருவதற்கு முன்பு அமைச்சர் அவர்கள் அதைத திறந்து வைத்ததற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரி

வித்துக்கொள்கிறேன். ஆனால், இது இப்பொழுது சொந்தக் கட்டடத்தில் இல்லாமல் இருக்கிறது. எனவே, அடுத்த ஆண்டாவது இதற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அவர்கள் ஆணையிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவர் அவர்களே, உணவு விடுதிகளுக்குச் சொந்தமான கட்டடங்களைக் கட்ட வேண்டுமென்று நான் மத்திய அமைச்சர் கலந்து கொண்ட கூட்டத்திலே யோசனை தெரிவித்திருக்கிறேன். மத்திய அரசு நிதியுதவி செய்யுமானால், அது பற்றி பின்னர் கவனிக்கலாம்.

மாப்படுகை கிருஷ்ணன் கோயில்

*263 வினா.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாயூரம் தாலுக்கா, மாப்படுகையில் காவிரிக்கரை ஓரமுள்ள கிருஷ்ணன் கோயில் அண்மையில் அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் சொத்து விவரம் என்ன?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் :

(அ) ஆம்.

(இ) இவ்வாலயத்திற்குச் சொந்தமான, பண்டாரவாடை, மாப்படுகை கிராமத்தில் ஆர்.எஸ். 28/1–ல் ஒரு ஏக்கர் 8 செண்ட் நஞ்சை நிலம், திரு ஆர். இராமலிங்கம் பிள்ளை என்பவர் அனுபவத்திலும், மாயவரம் நகரம், முனிசிபல் வார்டு 7, பிளாக் 53, நகர சர்வே 1562/2, நந்த வனம் புறம்போக்கு 88 செண்ட் நிலம் திரு கே. இராமய்யா நயினார் என்பவர் அனுபவத்திலும் உள்ளது.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் தாலுகாவிலே மாப்படுகையில் காவிரிக்கரை ஓரமுள்ள கிருஷ்ணன் கோயிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ராமையா நாயுடு என்பவர் இடித்துத் தள்ளிவிட்டு, தரைமட்டமாக்கிவிட்ட பிறகு—அதை அறநிலையத் துறையின் மூலம் எடுத்துக் கொண்ட பிறகும்—அந்தச் சொத்துக்களை அறநிலையத் துறையினரிடம் ஒப்படைக்காத காரணத்தைக் கண்டறிந்து அதை விரைவிலே அறநிலையத் துறையினிடத்திலே ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு இந்தக் கோயில் அறநிலையத் துறையினரால் எடுத்துக் கொள்ளப் பட்டு சம்பந்தம் என்பவரை அறங்காவலராக நியமித்து இருக்கிறோம். அதற்குப் பிறகு அந்த ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்களை சுவா